**கொழும்பு தலைநகர் நகர அபிவிருத்திச் செயற்திட்டம் - 2015**

---

கொழும்பு தலைநகர் நகர அபிவிருத்திச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கிக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட 2012 மே 18 ஆந் திகதிய 8145-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் பட்டோலை 2 இன் II (பீ.3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னைய பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சாகவிருந்த தற்போதைய மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் நகர அபிவிருத்தி அதிகாரசபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் மற்றும் கொழும்பு மாநகர சபை என்பன செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாகவும் உள்ளன. கொழும்பு நீர்வடிநில வடிகால்களில் வெள்ளம் ஏற்படுவதனைக் குறைத்தல், தெரிவுசெய்யப்பட்ட முன்மாதிரி முதலீடுகளினூடாக உள்ளூர் உட்கட்டமைப்பு வசதிகளையும் சேவைகளையும் புனரமைத்தல், மேம்படுத்துதல் மற்றும் பராமரித்தல் என்பவற்றிற்காக கொழும்பு தலைநகர் பிரதேசத்திலுள்ள உள்ளூராட்சி சபைகளின் இயலுமையினை வலுப்படுத்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 42,031.74 மில்லியனிற்குச் சமமான ஐ.அ.டொலர் 321 மில்லியனானதுடன் இதில் ஐ.அ.டொலர் 213 மில்லியன் அல்லது 66.35 சதவீதம் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியினால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆந் திகதி தொடங்கியிருந்ததுடன் 2017 யூன் 30 ஆந் திகதியளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்தவங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.4 **கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய

உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள், முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தனவா என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்ததா என்பதும்,

(உ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட விதப்புரைகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(ஊ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டுள்ளனவா என்பதும்,

(எ) செயற்திட்டத்தின் அமுல்படுத்தலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்

(ஏ) நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்தவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஐ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஓ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளைப் பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்தவங்களுக்கு இணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) விசேட (டொலர்) கணக்கிற்கான ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள், அதிலிருந்தான பற்றுதல்கள் மற்றும் அதற்கான மீள் நிரப்பல்கள் என்பன செயற்திட்டத்தால் பேணப்பட்ட ஏடுகள் மற்றும் பதிவேடுகளில் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருந்தன என்பதுடன் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அத்திகதியிலுள்ளவாறான இலங்கை மத்திய வங்கியின் (சீபீஎஸ்எல்) கணக்கீட்டுப் பதிவேடுகளுடன் திருப்திகரமாக இணக்கம் செய்யப்பட்டிருந்தது என்றும்,

(ஈ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட வேண்டுகைகளுக்கு இணங்க, மீளளிப்புக்கான விண்ணப்பங்களுக்கு ஆதாரமானவையாக, சமர்ப்பிக்கப்பட்ட செலவினக் கூற்றுக்கள் (எஸ்ஓஈஎஸ்) மீது நியாயபூர்வமாக நம்பிக்கை கொள்ள முடிந்திருந்தது என்றும்,

(உ) எனது முன்னைய ஆண்டுக் கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களைத் திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஊ) கடன் உடன்படிக்கையில் குறித்துரைக்கப்பட்ட நிதிசார் உடன்பாடுகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2016 மார்ச் 31 இல் அல்லது அதற்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூலை 28 இலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

**2.2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை.**

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 10 ஆம் திகதிய 48 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம், செயற்திட்ட பதவியணியினருக்கான விசேட படிகள் ஏனைய படிகளை தவிர்த்து அலுவலர்களின் அடிப்படைச் சம்பளத்தை அடிப்படையாக கொண்டு செலுத்தப்பட வேண்டும். எனினும், செயற்திட்ட பதவியணியினருக்கான விசேட படிகள் ஏனைய படிகளை உள்ளடக்கிய மொத்த சம்பளத்தை அடிப்படையாக கொண்டு செலுத்தப்பட்டிருந்தமையால், ரூபா 10.83 மில்லியன் தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.

**3. நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றல்**

**3.1 நிதிகளின் பயன்பாடு**

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு தொடர்பான சில முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்படுகின்றன.

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| மூலம் | கடன் உடன்படிக்கையில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | 2015 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் - மீளாய்வாண்டின் போது | | பயன்படுத்திய நிதிகள் - 2015 திசெம்பர் 31 வரை | |
|---|---|---|---|---|---|---|---|
| | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ஐ.அ.டொலர் மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| ஐபீஆர்டி | 213.00 | 27,890.22 | 5,300.00 | 18.80 | 2,556.00 | 64.00 | 8,517.00 |
| இலங்கை அரசாங்கம் | 108.00 | 14,141.52 | 1,800.00 | 3.40 | 466.00 | 12.80 | 1,700.00 |
| | **321.00** | **42,031.74** | **7,100.00** | **22.20** | **3,022.00** | **76.80** | **10,217.00** |

(அ) குறிப்பிட்ட செயற்திட்ட காலத்தினுள் ஒதுக்கப்பட்ட பொறுப்புக்களுடன் செயற்திட்ட இலக்குகளை அடைவதற்காக முழுச் செயற்திட்டக் காலத்தையும் மேவும் வகையில் மாதாந்த, காலாண்டு மற்றும் அரையாண்டு முதலியன ரீதியாக நிதிசார் மற்றும் பௌதீக இலக்குகளை சுட்டிக்காட்டுவதன் மூலம் விரிவான விபரமான செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும் அத்தகைய திட்டம் செயற்திட்ட நடவடிக்கைகள் ஆரம்பித்து 3 ½ வருடங்கள் கடந்த பின்னரும் கூட தயாரிக்கப்பட்டு அமுலாக்கப்பட்டிருக்கவில்லை. இந்த காரணத்தால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி மற்றும் பௌதிக ரீதியாக செயற்திட்டத்தால் அடையப்பட்ட உள்ளபடியான செயலாற்றலை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தது.

(ஆ) மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம், ரூபா 27,890 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 213 மில்லியன் மொத்த ஒதுக்கீட்டில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 30 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ரூபா 8,517 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 64 மில்லியன் செயற்திட்டத்தால் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க, செயற்திட்ட காலத்தின் மிகுதி 1 ½ வருடங்களின் போது ஐ.அ.டொலர் 149 மில்லியன் தொகை மீதியை பயன்படுத்தும் சாத்தியத்தன்மை சந்தேகத்திற்கிடமாக உள்ளது.

3.2 **பௌதீகச் செயலாற்றல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், கொழும்பு நீர் வடிநிலத்திலுள்ள வெள்ள இடர்களை குறைப்பதற்கு செயற்திட்ட காலப்பகுதியின் போது 12 உப கூறுகள் மேற்கொள்ளப்படுவதற்கு பட்டியல்படுத்தப்பட்டிருந்தன. எனினும், ரூபா 3,822.68 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மேற்கொள்ளப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டிருந்த 14 வடிகாலமைப்பு முறைமைகள் மற்றும் கால்வாய்களின் புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் மீளாய்வாண்டின் போது இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும் ரூபா 6,403 மில்லியன் கிரயத்தில் மதிப்படப்பட்ட 07 புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் வடிவமைப்புக் கட்டத்திலிருந்த அதேநேரம் ஏனைய 09 புனரமைப்பு மற்றும் முன்னேற்ற வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தொடரப்பட்டிருந்தன.

(ஆ) கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ஸ்ரீ ஜெயவர்த்தனபுர கோட்டை மாநகர சபை பகுதியிலுள்ள பேரியா ஏரியுடன் இணைந்த லீனியர் பூங்காவின் நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி வேலைள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 10 சதவீதமான மற்றும் 11 சதவீதமான மந்தமான பௌதீக முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தது. மேலும், கிரேஜரி கால்வாயின் புனரமைத்தல் நடவடிக்கைகள் மற்றும் கிரவிஸ் தீவக கடற்கரை பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண வேலைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முறையே 84 சதவீதம் மற்றும் 100 சதவீதம் பௌதீக முன்னேற்ற இலக்கை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதும் முறையே 51 சதவீதம் மற்றும் 77 சதவீதம் பௌதீக முன்னேற்றத்தை அறிக்கையிட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக, கொழும்பு பெருநகரில் உள்ளூராட்சி சபைகளிற்கான நகர அபிவிருத்தி உட்கட்டமைப்பு புனரமைப்பு மற்றும் இயலளவை கட்டியெழுப்பல் கூறின் கீழ் பொதுமக்கள் வசதிகளை முன்னேற்றுவதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 94 சதவீதமான இலக்கை அடைவதற்கு எதிர்பார்த்திருந்த போதும் 44 சதவீதமான பௌதீக முன்னேற்றத்தை அறிக்கையிடப்பட்டிருந்தது.

செயற்திட்ட நடவடிக்கைகள் மேலே குறிப்பிடப்பட்டதன் பிரகாரம், நடவடிக்கைகளை அமுல்படுத்துவதில் மந்தமான செயன்முன்னேற்றத்தை உணர்ந்திருந்த போதும், செயற்திட்ட கண்காணிப்புப் பிரிவு செயற்திட்ட வேலைகளை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. செயற்திட்ட வழிகாட்டல் குழுக்களின் கூட்டங்கள் மற்றும் மாதாந்த செயன்முன்னேற்ற மீளாய்வு கூட்டங்கள் போன்றன செயற்திட்ட நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யக்கூடிய வகையில் முறையாக நடைபெற்றிருக்காததுடன் இதன் விளைவால் பின்தொடர் நடவடிக்கைகள் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்ட பணிப்பாளர் 2012 யூன் இலிருந்து பகுதிநேர அடிப்படையில் நியமிக்கப்பட்டிருந்ததுடன் அவர் செயற்திட்ட நடவடிக்கைகளின் வெற்றிகரமான அமுல்படுத்தலுக்காக தன்னுடைய முழு இயலுமையையும் நேரத்தையும் அர்ப்பணித்திருக்கவில்லை.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செயற்திட்ட நடவடிக்கைகளுக்காக வேலைகளின் முறையான வடிவமைப்புக்கள் மற்றும் அதற்கான கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்காமையால் ரூபா 7,361 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட 22 ஒப்பந்தங்கள் ரூபா 6,441 மில்லியன் கிரயத்தில் மாத்திரமே பூர்த்திசெய்ய முடிந்திருந்தது. ஆகையால், அதற்கான வேலை ஆரம்பிப்பு முற்பணங்கள் ஒப்பந்தக்காரர்களுக்கு அளவுக்கு

மீறிய நிதி மிகைகளுக்கான சந்தர்ப்பங்களை அனுமதிப்பதன் மூலம் ஒப்பந்தங்களின் மேலதிக மதிப்பிடப்பட்ட கிரயத்தில் விடுவிக்கப்பட்டிருந்தது. மேலும், வட்டகன உயிரியற் பல்வகைமைப் பூங்காவின் வேலைகளின் நோக்கெல்லை குறிப்பிடத்தக்களவு மாற்றப்பட்டிருந்ததுடன் ரூபா 202 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான வேலைகளில், ரூபா 48 மில்லியன் கிரயத்தில் மதிப்பிடப்பட்ட வேலைகள் குறைக்கப்பட்டிருந்தது எனவும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) செயற்திட்டமானது ஒப்பந்தக்காரர்களின் வேலைசெய்யும் இயலுமைகளை கவனத்திற்கொண்டிருக்காததுடன் அதே ஒப்பந்தக்காரர்களுக்கு பல ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டதால் ஒப்பந்தக்காரர்களுக்கு காலநீடிப்பு அடிக்கடி அனுமதிக்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், ரூபா 374 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட 06 ஒப்பந்தங்களின் கீழான வேலைகளை பூர்த்திசெய்வதற்காக 22 நாட்களிலிருந்து 114 நாட்கள் வரையிலான காலவீச்சிற்கு நீடிக்கப்பட்டிருந்தது. மேலும், ரூபா 1,620 மில்லியன் மதிப்பிப்பட்ட கிரயத்தில் பெறுமதியிடப்பட்ட 05 ஒப்பந்தங்களை வழங்கிய ஏனைய ஒப்பந்தக்காரர்களுக்கு 117 நாட்கள் தொடக்கம் 209 நாட்கள் வரையிலான வீச்சில் காலநீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன. இதற்கு மேலதிகமாக ரூபா 4,724.09 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் வழங்கப்பட்ட 09 ஒப்பந்தங்களில் ஈடுபட்டுள்ள ஏனைய மூன்று ஒப்பந்தகாரர்களுக்கு 98 நாட்கள் தொடக்கம் 188 நாட்கள் வரையிலான வீச்சில் கால நீடிப்புக்கள் வழங்கப்பட்டிருந்தன.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்ட செயலாற்றல் அறிக்கை மற்றும் கொள்வனவு திட்டத்தின் பிரகாரம், உட்கட்டமைப்பு அபிவிருத்திகள் திண்மக் கழிவு முகாமைத்துவ முறைமைகள் மற்றும் மீள் குடியேற்றல் திட்டமிடல் போன்றவற்றின் மீதான ஆலோசனை வேலைகள் பூர்த்திசெய்வதற்கு இணங்கியிருந்த திகதிகளிலிருந்து 1 ½ வருடங்கள் தொடக்கம் 2 ½ வருடங்கள் வரையான வீச்சிலான காலதாமதத்தின் பின்னரும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சர்ச்சைத் தன்மையிலான விடயம்

செயற்திட்டமானது கொழும்பு நகரத்தின் வெள்ளக் கட்டுப்படுத்தல் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளின் வடிவமைத்தல் நோக்கங்களிற்காக ரூபா 33.88 மில்லியன் கிரயத்தில் 02 வேறுபட்ட கணனி மென்பொருள் பொதிகளை போட்டி விலைமனுக்களை கோராமல் கொள்வனவு செய்திருந்தது. எனினும், ரூபா 19.35 மில்லியன் கிரயத்தில் 2012 மார்ச் 12 இல் கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருள் பொதிகள் கொழும்பு மாநகர சபையால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரைகளுடன் இணங்காமையால் அன்றிலிருந்து விளைவற்றிருந்ததன் விளைவால் வெள்ளகட்டுப்படுத்தல் மற்றும் வடிகாலமைப்பு முறைமைகளின் வடிவமைத்தல் நடவடிக்கைகள் பட்டியலிடப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்களிற்கு பின்னரும் கூட ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வழமைக்குமாறான நடவடிக்கைகள்

உபயோகமான வாகனங்களை கொள்வனவு செய்வதற்கு கடனளிக்கும் முகவரிடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும் செயற்திட்டமானது ரூபா 59.14 மில்லியன் கிரயத்தில் சொகுசு வசதிகளுடன் 02 மோட்டார் வாகனங்களையும் பயணிகள் பேருந்தொன்றையும் கொள்வனவு செய்திருந்தது. இதில் வரிசை அமைச்சின் பயன்பாட்டிற்காக 01 மோட்டார் வாகனம் விடுவிக்கப்பட்டிருந்தது. பயணிகள் பேருந்து பொதுக் கூட்டுத்தாபனத்தின் பயன்பாட்டிற்காக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் உரிய பேருந்து கூட்டுத்தாபனத்தின் உத்தியோகத்தர் நலன்புரி நோக்கத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது வெளிப்பட்டிருந்தது.